**விவசாயின் வெற்றிக்கதை**

**ஜே.செந்தில்,**

**காய்கறி மொத்த வியாபாரி,**

**ஒட்டன்சத்திரம் சந்தை,**

**திண்டுக்கல் மாவட்டம்.**

**அலைபேசி: 9750779517**



---

என் பெயர் ஜே.செந்தில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஒட்டன்சத்திரம் சந்தையில் காய்கறி மொத்த வியாபாரம் செய்து வருகின்றேன். என்னுடைய பணி என்னவென்றால் விவசாயிகளிடம் காய்கறிகளை வாங்கி அதை ஒட்டன்சத்திரம் சந்தையில் மட்டும் விற்று வந்தேன். தினசரி சந்தை நிலவரத்தைப் பற்றி எனக்குத் தெரியாதவரை எனக்கு வேறு சந்தைகளின் காய்கறி விலைகள் எனக்குத் தெரியாது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி மையம் வழங்கும் இந்த திட்டம் மிகவும் சிறப்பான ஒரு திட்டமாகும்.

நான் தினசரி சந்தை நிலவரம் பற்றிய விபரத்தை ஒட்டன்சத்திரம் சந்தை ஆய்வாளர் மூலம் அறிந்து கொண்டேன். இந்த விபரங்களைப் பெற்றதன் மூலம் எனக்கு வியாபாரத்தில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டதோடு முன்பை விட அதிக லாபமும் அடைந்து வருகிறேன். முன்னர் எனக்கு காய்கறி வகைகளின் மற்ற சந்தை நிலவரங்களின் விலையை அறிய முடியாததால் நான் என்னுடைய சந்தையில் மற்றும் குறைந்த விலைக்கு விற்று வந்தேன். ஆனால் தினசரி சந்தை நிலவரங்கள் என்ற திட்டத்தினால் எனக்கு அருகில் உள்ள சந்தைகளான மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர் சந்தைகளில் உள்ள காய்கறி வகைகளின் விலை நிலவரங்களையும் அறிய முடிந்தது.

நான் எனது மொபைல் எண்ணை தினசரி சந்தை நிலவரத் திட்டத்தில் பதிவு செய்து அதன் மூலம் இன்று வரை மதுரை மற்றும் திருநெல்வேலி சந்தைகளின் சந்தை நிலவரங்களின் விலையை மொபைல் செய்திகள் மூலம் அறிந்து வருகிறேன். தினசரி சந்தை நிலவரத் திட்டத்தின் மூலம் எங்கள் சந்தையின் தினசரி விலை விவரங்களை அறிந்த பிறகு பல விவசாயிகள் எங்களைத் தொடர்பு கொண்டு வருகின்றனர். கடைசிமுறை தாராபுரத்தில் இருந்து ஒரு விவசாயி என்னைத் தொடர்பு கொண்டு அவரை வகைகளில் விலை நிலவரங்களை கேட்டுத்

தெரிந்து கொண்டார். அந்த சமயம் அவரை வகைகளின் விலை மற்ற சந்தைகளை விட எங்கள் சந்தையில் நல்ல விலைகிடைத்த படியால் அவர் எனக்கு விருப்பத்துடன் விற்பனை செய்தார். அந்த வியாபாரத்திற்குப் பிறகு இரண்டு பேருக்கும் லாபம் கிடைக்கும் வகைகளில் வியாபாரம் நடை பெற்று வருகிறது. அவருக்கு நல்ல லாபம் கிடைப்பதால் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்.

மேலும் என்னுடைய பொருட்களுக்கு அருகில் உள்ள சந்தைகளில் நல்ல விலை கிடைக்கும் போது அங்கும் விற்பனை செய்து வருகிறேன். இதை தினசரி சந்தை நிலவரம் என்ற திட்டத்தின் மூலமே அடைய முடிந்தது. இப்பொழுது எனக்கு வியாபாரத்தைப் பற்றி தெளிவான சிந்தனைகள் கிடைத்ததோடு எங்கே, எப்படி, எப்பொழுது விற்பனை செய்வது என்ற அடிப்படையும் புரிகிறது. தினசரி சந்தை நிலவரம் எனக்கு வியாபாரத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் மற்ற சந்தைகளில் உள்ள வியாபாரிகளின் நிலவரங்களையும் மற்ற காய்கறிகளையும் பற்றி அறிய முடிகிறது.

தினசரி சந்தை நிலவரத்தை எனக்கு அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திட்டத்தை ஏற்படுத்திய விஞ்ஞானிகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.